**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.936/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராபர்ட் | த.பெ | அருளானந்தன் |
| ஊர்: | : | முத்துப்பட்டி | சமயம்: | |
| வயது: | : | 52/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025**

**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் முத்துபட்டியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. 2018 ம் வருடம் ஒருநாள் மாலை 6.00–6.15 மணியளவில் இந்திராநகர் மாதவராயன்பட்டி இடையில் உள்ள வளைவு சாலையில் ஆட்டோவும் இருசக்கரவாகனமும் மோதி விபத்துக்குள்ளானதாக சொன்னார்கள். விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்தை கேள்வி பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் விபத்தில் காயம் ஏற்பட்டு கிடந்தார்கள். மேற்படி அங்கிருந்த ஆட்டோவில் இருந்தவர்கள் நல்ல நிலையில் இருந்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து காயம்பட்டு இறந்து போன நபரின் பிரேதத்தை தூக்குவதற்காக உதவியாக இருந்தார்கள். நானும் உடன் இருந்தேன். மற்றபடி விபத்து எப்படி நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 19.07.2018 அன்று மாலை பணங்குடி – கல்லல் சாலையில் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் சம்பவ சாலையில் சென்று கொண்டிருந்தபோது சற்று முன்னால் டிஎன்58 டி449 என்ற ஆட்டோ வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும் அதின் ஓட்டுநர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று சம்பவ சாலையில் வலதுபுறமாக ஏறி சென்று ஓரமாக வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும் அதில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் கீழே விழுந்து விட்டார்கள் என்றும் அங்கிருந்த நபர்கள் உதவியுடன் கீழே விழுந்தவர்களுக்கு உதவி செய்தபோது சதீஸ்குமார் என்பவர் விபத்தில் காயம் பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்

என்றும் இருசக்கர வாகனத்தில் வந்த மோகன்சிவசண்முகம் தலையின் இடது புறத்தில் இரத்தம் காயம் ஏற்பட்டு இருந்ததாகவும் மேற்படி ஆட்டோவின் ஓட்டுநர் கண்ணன் என்றும் கேள்விபட்டு தெரிந்து கொண்டு சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து காயம்பட்ட சிவசண்முகத்தை செம்பனூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் பின்னர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் அவர் இறந்து விட்டதாகவும் தெரிந்து கொண்டு தற்போது நீதிமன்ற விசாரணையில் கண்ணுற்ற சங்கதிகளை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.08 16:56:44 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.936/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அருள்ராஜ் | த.பெ | அருளானந்தன் |
| ஊர்: | : | முத்துப்பட்டி | சமயம்: | |
| வயது: | : | 51/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் முத்துபட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. 2018 ம் வருடம் ஒருநாள் இந்திராநகர் மாதவராயன்பட்டி இடையில் உள்ள வளைவு சாலையில் ஆட்டோவும் இருசக்கரவாகனமும் மோதி விபத்துக்குள்ளானதாக சொன்னார்கள். விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்தை கேள்வி பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் விபத்தில் காயம் ஏற்பட்டு கிடந்தார்கள். மேற்படி அங்கிருந்த ஆட்டோவில் இருந்தவர்கள் நல்ல நிலையில் இருந்தார். ஆஜர் எதிரி தான் சம்பவ சமயத்தில் ஆட்டோவில் இருந்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து காயம்பட்டு இறந்து போன நபரின் பிரேதத்தை தூக்குவதற்காக உதவியாக இருந்தார்கள். நானும் உடன் இருந்தேன். மற்றபடி விபத்து எப்படி நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 19.07.2018 அன்று மாலை பணங்குடி – கல்லல் சாலையில் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் சம்பவ சாலையில் சென்று கொண்டிருந்தபோது சற்று முன்னால் டிஎன்58 டி449 என்ற ஆட்டோ வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும் அதின் ஓட்டுநர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று சம்பவ சாலையில் வலதுபுறமாக ஏறி சென்று ஓரமாக வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும் அதில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் கீழே விழுந்து விட்டார்கள் என்றும் அங்கிருந்த நபர்கள் உதவியுடன் கீழே விழுந்தவர்களுக்கு உதவி செய்தபோது சதீஸ்குமார் என்பவர் விபத்தில் காயம் பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும் இருசக்கர வாகனத்தில் வந்த மோகன்சிவசண்முகம் தலையின் இடது

புறத்தில் இரத்தம் காயம் ஏற்பட்டு இருந்ததாகவும் மேற்படி ஆட்டோவின் ஓட்டுநர் கண்ணன் என்றும் கேள்விபட்டு தெரிந்து கொண்டு சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து காயம்பட்ட சிவசண்முகத்தை செம்பனூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் பின்னர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் அவர் இறந்து விட்டதாகவும் தெரிந்து கொண்டு தற்போது நீதிமன்ற விசாரணையில் கண்ணுற்ற சங்கதிகளை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

போலீசார் சம்பவ சமயத்தில் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை இன்றைக்கு தான் பார்க்கிறேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.08 16:56:50 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி